<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

<u>OS.No.246/2018</u>

2020 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ஆம் நாள் நீ.ம.சா.1 சாட்சி திரு.என்.எம்.சண்முகம் (வழக்கறிஞர்) என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969 ம் ஆண்டு 24 வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி உயர்திரு. P. ஈஸ்வரமூர்த்தி, B.Sc.,L.L.B., சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.என்.எம்.சண்முகம் (வழக்கறிஞர்) | வயது | : |
| த/பெ | : | சாதி | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | தொழில் | : |

<u>நீ.ம.சா.1 முதல் விசாரணை</u>

சத்தியமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண்.283/2009 இ.ம.எண்.912/2009 நான் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்டேன் என்றால் ஆமாம். அந்த உத்தரவு படி அந்த வழக்கு சொத்தை நான் குறிப்பிட்ட 4 எல்லை சொத்தை அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் செய்ய உத்தரவிடப்பட்டது என்றால் ஆமாம். அந்த சொத்தை தெரிந்து அளந்தேன். மனுதாரர் தரப்பில் உள்ள பிராது நகல் வைத்து சொத்துவிவரத்தை தெரிந்துகொண்டேன். இந்த பிராதின் சான்றியிட்ட நகல் என்னிடம் காட்டப்படுவதுதான் அது ஏற்கனவே வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த பிராது நகல்படி அந்த தாவா சொத்தின் விஸ்தீர்ணம் 1.03 ஏக்கர். என்னுடைய அறிக்கையில் 1 ஏக்கர் 22 சென்டை அளந்ததாக சொல்லியுள்ளேன். எதன் அடிப்படையில் 1 ஏக்கர் 22 சென்டை அளந்ததாக என்னுடைய அறிக்கையில் சொல்லவில்லை. அந்த வழக்கின் பிராது நகல் வா.சா.ஆ.9 ல் அந்த சொத்துக்கள் க.ச.எண்கள் 665/2, 665/3, 665/4, 665/5, 665/6 மற்றும் 665/7. அந்த காலை எண்கள் முழுவதையும் அளந்தோம். வா.சா.ஆ.10 என்னுடைய அறிக்கையில் அதுபோல அந்த

காலை எண்கள் முழுவதையும் அளந்ததாக குறிப்பிடவில்லை. அந்த காலைகளின் மொத்த விஸ்தீரணத்தையும் என்னுடைய அறிக்கையில் சொல்லவில்லை. வா.சா.ஆ.9 பிராது நகலை 1 ஏக்கர் 3 சென்டிற்கு 4 புற எல்லைகள் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த எல்லைகளை சரிபார்க்க மொத்த விஸ்தீரணத்தை சரிபார்த்து ஊர்ஜிதம் செய்தேன். அந்த எல்லைகளை சரிபார்க்க மொத்த விஸ்தீரணத்தை சரிபார்த்து ஊர்ஜிதம் செய்ததாக அறிக்கையில் சொல்லவில்லை. வா.சா.ஆ.10 அறிக்கைவுடன் உள்ள வட்ட சார்ஆய்வாளர் கொடுத்த வரைபடத்தின்படி 1 ஏக்கர் 3 சென்டின் வடபுற எல்லையாக சர்வே எண்.685 சத்தி தாளவாடி மெயின் ரோடு காண்பிக்கப்பட்டுள்ளது. எனது பணி ஆணையில் சொத்துவிவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை. வா.சா.ஆ.9 பிராது நகலை வடபுற எல்லையாக 1-ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்த 60 சென்ட் பூமி என்று குறிப்பிடப்பட்டிருந்தது. 1-ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்த 60 சென்ட் பூமியை நான் அடையாளம் காணவில்லை. வடபுற எல்லையை அடையாளம் காணாமல் அளவீடு செய்ததுதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புல எண்களின் அடிப்படையில்அளவீடு செய்தேன். வா.சா.ஆ.9 பிராது சொத்துவிவரத்தில் புல எண்கள் 4 எல்லைகளாக குறிப்பிடப்படவில்லை. வா.சா.ஆ.9 பிராதில் தென்புற எல்லையாக ருத்தரப்பாவுக்கு இதே காலையில் பாத்தியப்பட்ட பூமி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.10 அறிக்கை மற்றும் வரைபடத்திலும் ருத்தரப்பா பூமியை அடையாளம் கண்டு அளவீடு செய்ததாக நான் சொல்லவில்லை. வா.சா.ஆ.9 பிராதில் கிழபுற எல்லையாக நாகப்பா பூமி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.10 அறிக்கை மற்றும் வரைபடத்திலும் நாகப்பா பூமியை அடையாளம் கண்டு அளவீடு செய்யவில்லை. வா.சா.ஆ.9 பிராதில் மேல்புற எல்லையாக சிவருத்ரய்யா பூமி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.10 அறிக்கை மற்றும் வரைபடத்திலும் சிவருத்ரய்யா பூமியை அடையாளம் கண்டு அளவீடு செய்யவில்லை. வா.சா.ஆ.9 பிராது சொத்து விவரத்தில் 10 x 52 அகலத்தில் 11 1/2 சென்ட் அளவில் தடம் விடப்பட்டதாக குறிப்பிடவில்லை.

வா.சா.ஆ.10 வரைபடத்தின் படி 11 1/2 சென்ட் அளவில் தடம் க.ச.எண்.665/2-ல் செல்கிறது. வா.சா.ஆ.9 சொத்து விபரத்தில் உள்ள 4 எல்லைக்குள் மேற்படி 11 1/2 சென்ட் அளவில் தடம் இல்லை என்றால் சரியல்ல. எனது வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 11 1/2 சென்ட் அளவில் தடத்தின் வடபுறம் க.ச.எண்.685 கிழமேல் தார்சாலை செல்கிறது. அதன் மேல் புறம் க.ச.எண்.665/1 குட்டை உள்ளது. 11 1/2 சென்ட் அளவில் தடத்தின் கிழபுறம் க.ச.எண்.665/2 உள்ளது. 11 1/2 சென்ட் அளவில் தடத்தின் தென்புறம் க.ச.எண்.665/4 காலை உள்ளது. க.ச.எண்.665/4, மற்றும் 665/2 யாருக்கு பாத்தியப்பட்டது என்று விசாரித்து தெரிந்துகொண்டேன். எனது அறிக்கையின்படி 3 வது பத்தி 4 வது வரியில் குறிப்பிட்டுள்ள தடத்திற்கு கிழ புறமாகவும், தென் புறமாகவும் உள்ள பூமி வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விசாரித்து தெரிந்துகொண்டேன். அந்த வழக்கில் வாதிக்கு 1 ஏக்கர் 22 சென்ட் அனுபவத்தில் உள்ளது என்று தெரிந்துகொண்டேன். 11 1/2 சென்டிற்கு கிழபுறத்தில் மனுதாரருக்கு பூமி உள்ளது என்று அறிக்கையிலும், வரைபடத்திலும் சொல்லவில்லை. க.ச.எண்.665/4 யாருக்கு பாத்தியப்பட்டது என்று பட்டா சிட்டாவை வைத்து வட்ட சார் ஆய்வாளர் அளந்தார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.21 தான் 13.12.2018 தேதியிட்ட க.ச.எண்.665/4 ன் பட்டா என்றால் ஆமாம். நான் அளவீடு செய்யும்போது காட்டப்பட்ட பட்டாவில் தற்போதுள்ள பெயர்கள் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. க.ச.எண்.665/4-ன் தென்புறமாக க.ச.எண்.665/5 மற்றும் 665/6 உள்ளது என்று வா.சா.ஆ.10 வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட க.ச.எண்.665/5 மற்றும் 665/6 பூமிகளுக்கான பட்டா யார் பெயரில் இருந்தது என்று ஞாபகம் இல்லை. 666 மற்றும் 665/3 பூமிகளுக்கான பட்டா யார் பெயரில் இருந்தது என்று ஞாபகம் இல்லை.

<u>1-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வா.சா.ஆ.9 பிராது நகலின் சொத்து விவரத்தில் ப.க.ச.எண்.29 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதற்கு குறிப்பிட்ட 4 எல்லைகள்

கண்பிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். என் அளவீட்டின் போது 4 எல்லைகள் குறித்து பூமிதாரர்களின் புல எண்களை ஊர்ஜிதம் செய்துதான் அளந்தேன். என்னுடைய அறிக்கை வா.சா.ஆ.10-ல் 2 வது பத்தியில் தாவா சொத்திற்கு தெற்கும், கிழக்கும் 3-ம் நபர்களின் பூமி உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன். என்னுடைய வரைபடத்தில் 11 1/2 சென்ட் தடத்திற்கு கிழபுறத்தில் க.ச.எண்.665/2-ல் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன். என்னுடைய வரைபடத்தில் 11 1/2 சென்ட் தடத்திற்கு கிழபுறத்தில் உள்ள க.ச.எண்.665/2-ன் விஸ்தீர்ணம் 60 சென்டாக குறிப்பிடபட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த 60 சென்ட் யாருடையது என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. அந்த 60 சென்ட் 1-ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.9 பிராதில் சொத்து விவரத்தில் தெற்கில் ருத்ரய்யாவிற்கு இதே காலையில் பாத்தியப்பட்ட பூமி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அது பழைய புல எண்ணா புதிய புல எண்ணா என்று எனக்கு தெரியாது. களத்தில் சுமார் 3 மணி நேரத்திக்கும் மேல் அளவீடு செய்திருப்போம். என் அளவீட்டின் போது வட்ட சார் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவியாளர் உடன் இருந்தார்கள். நாங்கள் அளவீடு செய்து முடிக்கும்வரை யாரும் வந்து ஆட்சேபணைசெய்யவில்லை. அந்த அளவீட்டின் போது பொதுமக்கள் நிறைய நபர்கள் உடன் இருந்தார்கள். நீதிமன்றம் கொடுத்த பணியைதான் நிறைவேற்றினேன்.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

ஒ/ம். திரு.என்.எம்.சண்முகம்
(வழக்கறிஞர்) நீ.ம.சா.1

ஒ/ம்(P.ஈஸ்வரமூர்த்தி)
சார்புநீதிபதி,
சத்தியமங்கலம்.